


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் அரசு மானியத்தை ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையை சுசீந்திரம் – கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர் கோ.இராமகிருஷ்ணனிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகையை முறையே ரூ.4,000/– மற்றும் ரூ.2,000/–மாக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8மாணவர்களுக்குஅதற்கானவங்கிவரைவோலைகளைவழங்கினார். இந்நிகழ்ச்சியில்,இந்துசமயஅறநிலையத்துறைஅமைச்சர் பி.கே.சேகர்பாபு,தலைமைச்செயலாளர்சிவ்தாஸ்மீனா,சுற்றுலா,பண்பாடுமற்றும்அறநிலையங்கள்துறைமுதன்மைச்செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் நடந்துவரும் கல்விப்புரட்சி: இந்தியா மட்டுமல்ல, உலகமே வியக்கிறது!

## மாணவர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,நவ.25–**

**`தமிழ்நாட்டில் நடந்துவரும் கல்விப் புரட்சியைப் பார்த்து இந்தயா மட்டுமல்ல, உலகமே வியக்கிறது' என்று சென்னையில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதி வண்டி வழங்கும் விழாவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

சென்னை ஆர்.கே நகரில் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டித் திட்டத்தை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, செஞ்சி மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர்,ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பாக, மிதிவண்டி வழங்கக்கூடிய இந்த விழாவில் கலந்து கொண்டு மாணவர்களாகிய உங்களைச் சந்திக்கின்ற உங்களுடன் பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அதிகாரிகளுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவச் செல்வங்களாகிய உங்களையெல்லாம் நான் பார்க்கின்றேன். எல்லோரும் நல்ல முகமலர்ச்சியோடு, புன்னகையோடு, சிரிப்போடு இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்.

இது ஒரு மகிழ்ச்சிகரமான விழா. நீங்கள் அனைவரும் இன்னும் சிறிது நேரத்தில் ஒரு சைக்கிளுக்கு உரிமையாளராகப் ஆகப்போகிறீர்கள். உங்களின் மகிழ்ச்சியில் நானும் பங்கேற்று உங்களையெல்லாம் வாழ்த்த வந்திருக்கின்றேன்.

**கவனமாகச் செல்லுங்கள்!**

பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்றால், பேருந்தில் செல்ல வேண்டும். இல்லையென்றால், அம்மா, அப்பா, அண்ணன் யாராவது உடன் வந்து பள்ளியில் விட்டு விட்டு வர வேண்டும்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், பட்டேல் நகர், சென்னை மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர் (ஆர்.கே.நகர்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), ஐட்ரீம் ஆர்.மூர்த்தி (இராயபுரம்), துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். இனி உங்களது அந்த நிலை மாறி, நீங்களே உங்கள் சைக்கிளில் பள்ளிக்கூடத்துக்கு நாளையிலிருந்து செல்லலாம். உங்கள் எல்லோரிடமும் நான் சொல்லிக் கொள்வது, மிகவும் கவனமாகச் செல்லுங்கள் என்று கூறிக்கொள்கின்றேன்.

20212023 ஆம் ஆண்டுக்கான சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தை என்னுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் நான் துவக்கி வைத்தேன். இன்றைக்கு இந்த ஆர்.கே.நகர் தொகுதியில் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்களுக்கு பல திட்டங்கள்!

விலையில்லா மிதி வண்டி வழங்குவதன் மூலம் 4 லட்சத்து 89 ஆயிரம் மாணவர்களுக்கு 233 கோடி ரூபாய் செலவில் சென்ற ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 2023 2024 ஆம் ஆண்டுக்கான சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 246 கோடி ரூபாய் செலவில் 5 லட்சத்து 47 ஆயிரத்து 676 மாணவ மாணவிகளுக்கு வழங்குவதற்காக இன்று சைக்கிள்கள் தயார் நிலையில் உள்ளன. மிதிவண்டிகள் வழங்குவது போன்ற பல திட்டங்களை மாணவர்களுக்காக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. இதற்கெல்லாம் ஒரே ஒரு நோக்கம் தான் இருக்கின்றது. எப்படியாவது குழந்தைகளைப் பள்ளிக்கு வர செய்ய வேண்டும். வரவைத்து, அவர்களைப் படிக்க வைக்க வேண்டும் என்ற அந்த ஒரே நோக்கம்தான்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் இருந்த நீதிக் கட்சிதான் முதன் முதலில் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தது.

**கழக அரசின் காலை உணவுத் திட்டம்!**

நீதிக்கட்சியின் தலைவர்கள் தொடங்கித் தந்த திட்டம், பின்னாளில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. பிறகு ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர் அவர்களால் சத்துணவுத் திட்டமாக மேம்படுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் உணவுடன் முட்டை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது.நம்முடைய முதலமைச்சர் இப்போது முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் 31,000 பள்ளிகளில் 18 லட்சம் மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டம் வழங்கப்படுகின்றது. இதிலிருந்து ஒன்றை மட்டும் நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். நீதிக் கட்சி ஆட்சி தொடங்கி, இப்போது இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரை கடந்த நூறு ஆண்டுகளில் மாணவர்களுடைய படிப்புக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். இந்த நூறாண்டுகளில் கல்வியில் மிகப்பெரிய மாற்றத்தை ஒரு கல்விப் புரட்சியை நாம் நிகழ்த்தியிருக்கிறோம்.

காலை உணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம், சீருடை, காலணிகள், பஸ் பாஸ், மிதிவண்டி, மாணவ, மாணவிகளுக்கான தங்கும் விடுதிகள் போன்ற எண்ணற்ற திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதோடு மேலும் பல புதிய திட்டங்களையும் கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் அடுத்தடுத்து வந்த அரசுகள் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த காரணத்தினால் இன்றைக்கு இந்தியாவே, ஏன் இந்த உலகமே வியந்து பார்க்கக் கூடிய வகையில், விண்வெளி விஞ்ஞானிகள் பலர் தமிழ்நாட்டில் இருந்து உருவாகி வருகிறார்கள்.

**அரசுப் பள்ளியில் படித்த விஞ்ஞானிகள்!**

அதிலும் அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள் இன்றைக்குச் சிறந்த விஞ்ஞானிகளாக உருவாகி இருக்கிறார்கள். சமீபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒன்பது பேருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாராட்டு விழா நடத்தி அவர்களுக்கு அரசின் சார்பாக 5 லட்ச ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கினார்.

இங்கே இருக்கக்கூடிய மாணவர்களும் அந்த நிகழ்ச்சியை எல்லாம் காணொலிக் காட்சி வாயிலாக செய்திகளாகப் பார்த்திருப்பீர்கள். அந்தப் பாராட்டு நிகழ்ச்சியை மாநிலம் முழுவதும் 58 லட்சம் மாணவர்கள் பார்ப்பதற்கு நம்முடைய தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அது எதற்காகவென்றால், உங்களிலிருந்து அது போன்ற பல விஞ்ஞானிகள் உருவாக வேண்டும்.

படிப்பில் உங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் அதை ஏற்பாடு செய்தார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன்.

**உயர் கல்வி பயிலும் மாணவர்களின் விகிதம் அதிகரிப்பு!**

பள்ளிகளிலிருந்து உயர்கல்வி செல்கின்ற மாணவர்களின் விகிதம் அதை ஆங்கிலத்தில் GER (Gross Enrolment Ratio) என்பார்கள், பள்ளி முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்கின்ற அந்தச் சதவிகிதம், தமிழ்நாட்டில் ஏறக்குறைய 50 சதவிகிதமாக உயர்ந்து மாணவர்கள் உயர் கல்வியில் சேர்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடு தவிர மற்ற மாநிலங்களிலெல்லாம் வெறும் 27 சதவிகிதம்தான். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் இரண்டு மடங்கு உயர்வு. உயர்கல்வியில் சேர்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்குப் பெருமை தமிழ்நாட்டு மாணவர்கள் ஆகிய உங்களுக்குப் பெருமை.

இது போதாது. பள்ளிகளில் இருந்து வெளியே வரும் மாணவர்கள் 50 சதவிகிதம் இல்லை அது 100 சதவிகிதமாக மாற்ற வேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சர் அவர்களின் ஒரே குறிக்கோள்.

**விளையாட்டிலும் ஈடுபட வேண்டும்!**

படிப்பு மட்டுமல்ல, விளையாட்டுத்துறை அமைச்சராக, இளைஞர் நலம் – மேம்பாட்டுத் துறை அமைச்சராக நான் உங்களிடத்தில் ஒரு கோரிக்கை படிப்பில் மட்டுமல்ல, நீங்கள் விளையாட்டிலும் அதிகளவில் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். இங்கே இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கு ஒரு கோரிக்கை. PET ஆசிரியர்கள், படிக்கக் கூடிய மாணவர்களுக்கு அந்த வகுப்பை விளையாட கொடுங்கள். எனவே படிப்போடு விளையாட்டிலும் நீங்கள் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாணவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் மாணவர்களோடு உரையாடும் போதெல்லாம் அவர் குறிப்பிடுகின்ற ஒரே வார்த்தை இதுதான்.

``மாணவர்களாகிய நீங்கள் கல்வியில் ஈடுபாடு செலுத்துங்கள். உங்களிடமிருந்து பறிக்க முடியாத ஒரே சொத்து எதுவென்றால் உங்களுடைய கல்வி என்ற அந்தச் சொத்துதான். எனவே நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள்'' என்று உங்களுக்கு ஒரு தாயாகத் தந்தையாக அனைத்துமாக நம்முடைய முதலமைச்சர் இருந்து உங்களையெல்லாம் வழிநடத்துவார் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**பறிக்க முடியாத ஒரே சொத்து கல்வி!**

மிதிவண்டி வாங்க வந்திருக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, அனைவரும் கவனமாகப் பயன்படுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் அரசு செயலாளர் கீதா ஐ.ஏ.எஸ், ஆணையாளர்கள் அனில் மிஸ்ரா, சம்பத்,சென்னை பெருநகர நகரமைப்புக் குழு தலைவர் இளைய அருண், துணை மேயர் மகேஷ்குமார், சிறுபான்மையினர் நலம் இயக்குநர் நாசியா மரியம் ஐ.ஏ.எஸ், பள்ளி கல்வித்துறை இணை இயக்குநர் ராமகிருஷ்ணா, மற்றும் ஆசிரியர் பெருமக்கள், அரசு அதிகாரிகள், ஏராளமான மாணவ, மாணவிகள், உள்பட கழகத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

### வரதை த.பரி தலைமையில்

# 112வது வட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## வினோத் வேலாயுதம் - அகஸ்டின் பாபு பங்கேற்பு!

*சென்னை, நவ.25-*

*நவம்பர் 27ல் மாநில இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்ட கழகம் சார்பில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் விழா நடைபெறுகிறது.*

*வட்ட செயலாளர் வரதை த.பரி தலைமை வகிக்கிறார். 112வது வட்ட கிளை சார்பில் டிரஸ்ட்புரம் 6வது தெருவில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்குதல் விழா காலை 9.00மணியளவில் நடைபெறுகிறது. எஸ்.மனோகரன், வி.பொன்சீலன், ஜெனரேட் ராஜீ, எஸ்.பொற்கொடி, வி.ராஜ், எச்.சக்கரவர்த்தி, பி.பாலாஜி, பி.சிவா, எல்.முருகன், இ.ஜான் ஆகியோர் முன்னிலை வகிக்கிறனர்.*

*ஆர்.பிரவின், ஜக்கரியா காலனி ஆர்.பி.ராம்குமார், வி.பிரேம்குமார் ஆகியோர் வரவேற்புரையில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் கழக கொடியேற்றி இனிப்பு வழங்குகிறார்.*

*சென்னை மேற்கு மாவட்ட பொருளாளர் ஜெ.எஸ்.அகஷ்டின்பாபு, வழக்கறிஞர் (பொதுக்குழு) டி.ஜோஸ் டேனியல்,*

*எம்.ஏ.ஜெஸ்டின், புவி.பாலாஜி, என்.பி.இதயத் பாஷா, எலிசபெத் அகஷ்டின்பாபு எம்.சி., எஸ்.பார்த்திபன், தா.ஐசன்ட் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்றங்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

*கீழ்க்கண்ட இடங்களில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி ஒலிபெருக்கி அமைத்து விழா நடைபெறும் இடங்கள்:*

*டிரஸ்ட்புரம் 6வது தெரு, புலியூர் பிரதான சாலை மைனர் டிரஸ்ட்புரம், தாஸ்புரம், வரதராஜன் பேட்டை மெயின் ரோடு, ஆரோக்கியசாமி தெரு, சுபேதார் தோட்டம், சுபேதார் தோட்டம் (மொட்டை கோட்ரஸ்), ஜக்கரியா காலனி 1 முதல் ஐந்து தெருக்கள் வரை, புலியூர் 1வது மெயின் ரோடு, வரதராஜப்பேட்டை பொன்னுசாமி வாத்தியார் தெரு, சூளைமேடு ஹரோடு, சௌராஷ்டிரா நகர் 1 முதல் 9 தெருவரை, நேரு தெரு, காந்தி சிலை அருகில் நடைபெறுகிறது.*

### மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன் டி.கே.லதா பிளாரன்ஸ் அறிக்கை!

*சென்னை,நவ.25-*

*சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் மாநில இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், மாநில பிரச்சார குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் இன்று 25.11. 2023 மாலை 5 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் அமைந்துள்ள என் 20/32 காம்தார் நகர் நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.*

*ஆகவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், சமூக வலைதள பொறுப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*பொருள்: அமைச்சர் உதயநிதி அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் மற்றும்*

*கழக ஆக்கப் பணிகள்*

*யோகேஸ்வரி சுந்தரேசன் (அமைப்பாளர் மகளிர் அணி,) டி.கே.லதா பிளாரன்ஸ் (அமைப்பாளர் மகளிர் தொண்டரணி)*

*இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*




திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அணி சார்பில் நீட் தேர்வு எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் ஜி.சித்திக் அலி ஏற்பாட்டில் திருத்தணி மா.பொ.சி. நகரில் உள்ள மசூதி அருகில் நடைபெற்றது .இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் சுபேர்கான் முன்னிலையில் இஸ்லாமியர் மற்றும் பொதுமக்கள் நீட் தேர்வு எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டு நீட் விலக்கு நம் இலக்கு என வைத்திருந்த பெட்டியில் போடப்பட்டது. இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் பி.டி.சந்திரன், எஸ்.மகாலிங்கம், டி.ஆர்.கே.பாபு, பொதுக்குழு உறுப்பினர் பா.சிட்டிபாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், வட்டச் செயலாளர் ரகீம், நிர்வாகிகள் திலகவதி ரமேஷ், மத்தூர் பன்னீர்செல்வம், குமரன், அசோகுமார் ஷெரிப், மாவட்ட சிறுபான்மை அணி நிர்வாகிகள் அயூப் அலி, அஸ்லாம், அப்துல்லா, பிரகாஷ், பெருமாள் மற்றும் அன்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.




குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (24.11.2023) சென்னை, IIT வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'ஸ்டார்ட் அப் தமிழா' என்ற தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சியை அறிமுகம் செய்து வைத்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், StartUp TNCEO சிவராஜா ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.